# விவிலியத்தில் கையறுநிலை

முனைவர் சா.தேவநேசம் மேபல்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி- 627007

104

ஆய்வு நோக்கம் :-
படைப்பாளி தான் வாழும் சமுதாயத்தைத் தன் இலக்கியங்களில் பிரதிபலிக்கிறான். அவற்றுள் சில கால வெள்ளத்தால்அடித்துச் செல்லப்படுகின்றன. பல இலக்கியங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் சில இலக்கியங்கள் மட்டும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்து நின்று நிலைத்து உயர்ந்து நிற்கின்றன. அந்த வரிசையில் நிலைத்து நிற்கும் இலக்கியமான விவிலியத்தில் புறக்கூறான கையறுநிலை இடம்பெறும் பாங்கினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**விவிலியம்**

உலக அளவில் மிகுதியான மக்களால் விரும்பி வாசிக்கக்கூடிய நூல்களுள் முதலிடத்தில் இருப்பது விவிலியம். விவிலியம் எழுதப்பட்ட காலம் முதல் இன்றுவரை அதன் செல்வாக்கு அதிகரித்து எக்காலத்திற்கும் ஏற்புடைய ஒன்றாகத் திகழ்கிறது.அதற்குக் காரணம் இந்த நூலில் இல்லாத செய்திகளே இல்லை எனலாம். அறக்கருத்துக்கள் , ஆன்மீகச் செய்திகள் , இம்மை மறுமைக் கோட்பாடுகள் , அகச்செய்திகள்,புறக்கூறுகள், வாழ்வியல், வரலாற்று நிகழ்வுகள், முக்காலத்தையும் முன் வைக்கும் மாண்பு , என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். விவிலியம் உலகத்திற்குப் பொதுவானதாகத் திகழ்ந்தாலும் தமிழ் இலக்கிய இலக்கணக் கூறுகள் மிகுதியாக இடம்பெறுவதைக் காணமுடிகிறது. அந்த அடிப்படையில் புறத்துறையான கையறுநிலை பல சூழல்களில் இடம்பெறுகிறது.

**கையறுநிலை**

கையறுநிலை என்பது கையற்றுப் போன்றதொரு சூழ்நிலையில் பெரும்பாலும் வேண்டிய ஒருவரின் மரணத்தின் போது பாடப்படுவது. இது நாட்டுப்புறப் பாடல்களில் இடம்பெறும் ஒப்பாரிப் பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது. தொல்காப்பியம் இதற்கு விளக்கம் தரும்போது ,

**“கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ**

**ஓழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்”**( தொல். புறத். 77)

என்று வரையறுக்கிறது.

புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியலில் ஆறு துறைகள் கையறுநிலைத் துறைக்குரியவை. அவற்றுள் நான்கு பாடல்கள் மன்னன் இழப்புக்கு வருந்திப் பாடுவது. ஒரு பாடல் இளமை கழிந்தமையை எண்ணி வருந்துவது. மற்றொரு பாடல் மன்னன் தனது மனைவியின் மரணத்தில் வருந்திப் பாடுவது. கரந்தைத் திணையில் தன் தலைவனின் இறப்பால் செய்வதறியாது திகைத்த பாணனின் கையறுநிலை கூறப்படுகிறது.

புறநானூற்றில் கையறுநிலைப் பாடல்கள் மொத்தம் 41 இடம்பெறுகின்றன. அவற்றுள் பாரி மகளிர் தம் தந்தையை நினைத்து,

**“அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்**

**வென்றி எறிமுரசின் வேந்தர் எம்**

**குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே”**(புறம் 112)

என்று பாடும் பாடல் புகழ் மிக்கது.

நேரு மீது மிகுந்த பற்று வைத்த கண்ணதாசன், நேரு மறைந்தபோது எழுதிய,

**“சாவே உனக்கொருநாள்**

**சாவு வந்து சேராதோ**
**சஞ்சலமே நீ ஒரு சஞ்சலத்தைக் காணாயோ**
**தீயே உனக்கொரு நாள் தீமூட்டிப் பாரோமோ**
**தெய்வமே உன்னையும் நாம் தேம்பி**
**அழ வையோமோ”**

என்ற கவிதை கற்போர் நினைவை விட்டு நீங்காதது.

கையறுநிலைப் பாடல்கள் பாடும்போது தம் வருத்தத்தைப் பதிவு செய்வதோடு இறந்தவரின் பெருமையும் பேசப்படுகிறது.

**விவிலியம் சுட்டும் கையறுநிலை**

விவிலியத்தில் இடம்பெறும் பல பாத்திரங்கள் தம் உறவுகள் இறந்த மற்றும் பல இழப்புகளின் பின்னணியில் புலம்பிய வரிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மகனின் மரணத்தில் தந்தை , மன்னனின் இழப்பில் படைவீரன் , படைத்தளபதியின் மரணத்தில் மன்னன் என பல சூழ்நிலைகளில் புலம்பும் வார்த்தைகள் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.

**அப்சலோமுக்காகத் தாவீது**

தாவீது மன்னனின் மூன்றாவது மகன் அப்சலோம். ‘அப்சலோம்’ என்னும் சொல்லுக்கு ‘அமைதியின் தந்தை’ என்று பொருள் கூறப்படுகிறது. ஆனால் அவன் பெயருக்கும் செயலுக்கும் தொடர்பே இல்லாமல் இருந்தது. அந்த நாட்டிலே மிகவும் அழகானவன் அப்சலோம் . அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையும் எந்த ஒரு குறையும் இல்லை. நீண்ட தலைமுடியைக் கொண்டவன். ஆனால் அவன் தன் தந்தையை வீழ்த்திவிட்டு தான் அரியணையில் ஏறவேண்டும் எனத் திட்டமிட்டான். அதற்காக மக்களைத் தன் பக்கமாகத் திருப்ப பல சதிவேலைகளில் ஈடுபட்டான்.

பல போராட்டங்களுக்குப் பின்னர் தன் தந்தைக்கு எதிராகத் தலைவனானான் அப்சலோம். தந்தைக்கு எதிரியானான். ஒரு கட்டத்தில் இரு படைவீரர்களுக்கிடையே போர் நடைபெறும்போது , தந்தையாகிய தாவீது தன் படைத்தலைவர்களிடம் என் நிமித்தம் என் மகனாகிய அப்சலோமை மெதுவாய் நடத்துங்கள் என்று கட்டளையிட்டான். இதுதான் தந்தையின் அன்பு. மகன் தனக்கு எதிராகப் படையெடுத்து வரும் சூழலிலும் அவனைக் கொல்ல தாவீதின் மனம் ஒப்பவில்லை.

ஆனால்**“அப்சலோம் கழுதையின் மேல் ஏறி வரும்போது அந்தக் கோவேறுகழுதை சன்னல் பின்னலான ஒரு பெரிய கர்வாலி மரத்தின் கீழ் வந்ததினால் அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டு அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்”** (2சாமுவேல் 18:9). அந்தரத்தில் கூந்தல் சிக்கித் தொங்கிக் கொண்டிருந்த அவனைப் படைத்தலைவன் யோவாப் குத்திக் கொன்று போட்டான்.

அப்சலோம் மரணமடைந்த செய்தியைக் கேள்விப்பட்ட அவன் தந்தை தாவீது மிகவும்கலங்கினான். அவன் மேல்வீட்டிற்குள் ஏறிப்போகையில் கையறுநிலையாக , **“என் மகனாகிய அப்சலோமே நான்**

**உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும் அப்சலோமே என் மகனே என் மகனே”** (2சாமுவேல் 18:33) என்று அழுதான்.

இந்த நிகழ்ச்சியை ஆராய்ந்தால் தன்னை அழிக்க எண்ணி , எதிர்த்து வந்த காரணத்தினால் மரணம் அடைந்த மகனின் மரணத்தைக் கூடத் தகப்பனால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. தந்தையை எதிர்த்த தனயனின் முடிவினை இது உணர்த்துகிறது. இருவருக்குமிடையே உள்ள வேறுபாட்டினை இப்பகுதி வெளிப்படுத்துகிறது.

**சவுலுக்காகத் தாவீது**

இஸ்ரவேலின் முதல் மன்னன் சவுல். தாவீது சிறந்த பாடகன். இசைக்கலைஞன். போர் வீரன். சவுல் ராஜாவின் மருமகன். பெலிஸ்தியனான கோலியாத்தை எதிர்க்க எவருக்கும் துணிவில்லாத நிலையில் சிறுவனாக இருந்த தாவீது அவனைக் கொன்று போட்டான். அதன் பின்னர் அவன் செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரித்தது. ‘சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம்என்று மக்கள் தாவீதைப் புகழ்ந்தார்கள். இதனால் யுத்தவீரனான தாவீது மீது பொறாமை கொண்ட சவுல் அவனைக் கொல்லத் துணிந்தான்.

எனவே தாவீதைக் கொல்ல சவுல் தன் வீரர்களுடன் துரத்திக் கொண்டேயிருந்தான். இதனால் சவுலிடமிருந்து தனது உயிரைக் காப்பாற்ற தாவீது நகரம் , குகை, காடு என அங்குமிங்குமாக அலைந்து ஒளிந்து கொண்டிருந்தான். ஆனால் தாவீதுக்குச் சவுலைக் கொல்ல வாய்ப்புகள் பல வேளைகளில் கிட்டியபோதும் அவன் அப்படிச் செய்யவில்லை. காரணம் இறைவனால் மன்னனாக உருவாக்கப்பட்டவன் சவுல்.எனவே அவனுக்கு எதிராகக் கை போடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான் தாவீது.

ஆனால் பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் இடையே நடந்த போரில் சவுலின் மூன்று மகன்களும் கொல்லப்பட்டனர். சவுல் வில்வீரரால் தாக்கப்பட்டான். ஆனால் அவர்கள் கையினால் சாகக்கூடாது என முடிவுசெய்து தன் பட்டயத்தை நட்டு, தானே அதின்மேல் விழுந்து செத்துப்போனான்.

மூன்றாம் நாளிலே ஒரு அமலேக்கியன் தாவீதிடம் நற்பெயர் வாங்கலாம் என்று எண்ணி , ஈட்டியில் சாய்ந்து கொண்டிருந்த சவுலின் வேண்டுகோளுக்கிணங்க அவனைக் குத்திக் கொன்று போட்டதாகச் சொன்னான். தனக்கு இதனால் எதாவது வெகுமதி கிடைக்கும் என்பது அவனது எதிர்பார்ப்பு.ஆனால் தாவீதோ, “கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக் கொன்று போடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற் போனது என்ன ?”(2சாமு.1:14) என்று சொல்லி அவனைக் கொலை செய்யும்படிக் கட்டளையிட்டான். தன்னைக் கொலை செய்ய அலைந்த சவுலுக்குத் தாவீது கொடுத்த பரிசு மரணம். இந்த இடத்தில் தாவீது பிறரிடமிருந்து வேறுபடுகிறான். அது மட்டுமன்றி கையறுநிலையாகப் புலம்புகின்றான்.

சவுலின் வீரத்தைப் புகழும்போது , பராக்கிரமசாலி என்றும் சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை என்றும் கூறுகிறான். கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும் சிங்கங்களைப் பார்க்கிலும் பலமும் உடையவனாக அவனைப் பாராட்டுகிறான். **“இஸ்ரவேலின் குமாரத்திகளே உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து உங்கள் உடையின் மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள்”** (2 சாமு. 1:24)என்று மக்களுக்குச் செழிப்பான வாழ்க்கையைக் கொடுத்த மன்னன் சவுலைப் புகழ்கிறான். தன்னைக் கொல்ல நினைத்த சவுலைப் பழிவாங்காமல் அவன் மரணத்தில் அழுது புலம்புகிறான். இறைவன் பார்வையில் உத்தமமாய் வாழ்ந்த தாவீது மன்னனானான். இவனது இந்த நற்பண்பு பிறருக்குப் பாடமாகிறது.

**யோனத்தானுக்காகத் தாவீது**

மன்னன் சவுலின் மகன் யோனத்தான். தாவீதும் யோனத்தானும் உயிர் நண்பர்களாக இருந்தனர். தந்தை சவுலைப் பகைத்தபோதும் யோனத்தான் தாவீதை மிகவும் நேசித்தான். பலமுறை சவுல்மூலம் தாவீதுக்கு ஆபத்து வந்த வேளையில் அவனைத் தப்புவித்தான்.

கில்போவா மலையில் பெலிஸ்தியரால் யோனத்தான் கொல்லப்பட்டதை அறிகிறான் தாவீது. யோனத்தானின் வீரத்தையும் அன்பையும் தனது புலம்பலில் வெளிப்படுத்துகின்றான். பராக்கிரமசாலியின் நிணத்தை உண்ணாமல் யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை என்று அவன் வில் வித்தையைப் பாராட்டுகிறான்;

இன்னும் ஒரு படி மேலே போய் , **"என் சகோதரனாகிய யோனத்தானே , உனக்காக நான் வியாகுலப்படுகிறேன். நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய் உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது. ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே. யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே"** (2 சாமு. 1:26,27) என்று அவன் அன்பையும் , வீரத்தையும் வெளிப்படுத்துகிறான். பெண்களின் நட்பை விடவும் யோனத்தானின் நட்பு ஆழமாகவும் அதிகமாகவும் இருந்தது என்று கையறுநிலையாகப் பாடுகிறான்.

**அப்னேருக்காகத் தாவீது**

சவுலின் படைத்தலைவன் அப்னேர். நேரின் மகன் இவன். சவுலின் மறுமனையாட்டியான ரிஸ்பாளின் மகன் இஸ்போசேத். சவுலின் மரணத்திற்குப் பின்னர் இஸ்போசேத்தை மன்னனாக்கினான். இஸ்ரவேலரில் சிறுபிரிவினர் தாவீதை மன்னனாகவு ம்பெரும்பிரிவினர் இஸ்போசேத்தை மன்னனாகவும் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் இஸ்போசேத்துக்கும் அப்னேருக்குமிடையே ஏற்பட்ட பிளவின் காரணமாக அப்னேர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணி அவனோடு இணைந்து கொண்டான். எனவே அப்னேர் மொத்த இஸ்ரவேலரும் தாவீதை ஏற்றுக்கொள்ளும்படி முயற்சி செய்தான். அதனால் மகிழ்ந்த தாவீது அப்னேருக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் விருந்து அளித்தான். இதனை அறிகிறான் யோவாப்.

யோவாப் என்பவன் செருயாவின் மகன். தாவீதின் படைத்தலைவன். அப்னேர் யோவாபின் தம்பி ஆசகேலைக் கொன்றிருந்தான். இதினிமித்தம் யோவாப் அப்னேர் மீது பகையை வெளிப்படுத்தினான். அப்னேருக்குத் தாவீது விருந்து வைத்து சமாதானமாக அனுப்பினதை அறிந்து வெகுண்டெழுந்து , அப்னேரைத் தாவீதுக்குத் தெரியாமல் அழைத்து வரச்செய்து தன் தம்பியின் இரத்தப்பழியை வாங்க , அவனை வயிற்றில் குத்திக் கொன்று போட்டான்.

அப்னேரின் மரணத்தை அறிந்த தாவீதுராஜா மனமுடைந்து சத்தமிட்டு அழுதான். அந்த வேளையில் **"மதிகெட்டவன் சாகிறது போல அப்னேர் செத்துப் போனானோ ? உன் கைகள் கட்டப்படவும் இல்லை. உன் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை. துஷ்டர் கையில் மடிகிறது போல மடிந்தாயே"**(2சாமு.3:34) என்று கையறுநிலையாகக் கதறுகிறான்.

**பிள்ளைகள் மற்றும் அனைத்தும் இழந்த நிலையில் யோபு**

விவிலியத்தில் யோபு என்னும் இறைபக்தன் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவன் மிகச் செல்வந்தன். அதே சமயம் உத்தமனும் , உண்மையுள்ளவனுமாகத் திகழ்ந்தான். இறைவனுக்குப் பயந்ததினால் தீமையை வெறுத்தான். அவனுக்கு 7 மகன்கள் ,3 மகள்கள் , 7000ஆடுகள், 3000 ஒட்டகங்கள் , 1000 காளைகள் ,500

பெண் கழுதைகள் என்று எல்லாம் நிறைவாய் இருந்தன. இவனைக் குறித்து இறைவனே நல்லவன் என்று சாட்சி பகர்ந்தார்.

அவ்வேளையில் சாத்தான் இறைவனிடம் வந்தான். நீர் அவனுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. அதனால் நல்லவனாக இருக்கிறான். உம் கையை நீட்டி அவனுக்குரியதை அழித்தால் போதும். அவன் உம்மைச் சபிப்பான் என்றான். அதற்கு இறைவன் சரி நீ அப்படியே செய். ஆனால் அவன் உடம்பைத் துன்புறுத்தாதே என்றார். அதன்படி யோபு எல்லாவற்றையும் ஒரே நாளில் இழக்கிறான். அவனது பிள்ளைகள் அனைவரும் ஒரே நாளில் இறக்கின்றனர். அவனது உடைமைகளை ஒரே நாளில் இழக்க நேரிடுகிறது.

இந்த வேளையில் யோபுவின் இருதயம் சுக்குநூறாக உடைகிறது. எனவே அவன் ஆடைகளைக் கிழித்து, தலையை மழித்து தரையிலே விழுந்து பணிகிறான். அவனது வேதனை தாங்க முடியாதது. யாராலும் ஆறுதல் கூற முடியாதது. எந்த ஒரு தவறும் செய்யாத அவன் அந்த வேளையிலும் இறைவனைக் குறைகூறவில்லை. மாறாக மற்ற கையறுநிலைகளில் காணமுடியாத ஒரு உயரிய பண்பை இவனிடம் காணமுடிகிறது. அவனது கையறுநிலையாக , **"நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன் , நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன் , கர்த்தர் கொடுத்தார் , கர்த்தர் எடுத்தார் , கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"** (யோபு1:21) என்று கூறுகிறான். இந்த கையறுநிலை வியக்கத்தக்க ஒரு மனப்பக்குவத்தை வெளிப்படுத்துகிறது. அதைப் போல மற்றொரு இடத்தில் இறைவன் கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்கிறான்.

பல வேளைகளில் சிறு இழப்புகள் கூட நம்மால் எதிர்கொள்ள முடிவதில்லை. உடனே பிறரையோ கடவுளையோ குறை கூறுகின்றோம். ஆனால் இறைபக்தன் யோபுவின் பண்பு , கையறுநிலை சிந்திக்க வைக்கிறது.பின் நாட்களில் இறைவன் யோபுவை இரண்டு மடங்கு ஆசீர்வதித்ததை யோபுவின் வரலாற்றில் காணமுடிகிறது.

**எலியாவுக்காக எலிசா**

எலியா ஒரு தீர்க்கதரிசி. இறை நாமத்தினால் பல அற்புதங்கள் புரிந்தவன். கடவுளின் கட்டளைப்படி எலிசாவைத் தீர்க்கதரிசியாக அபி N~கம் பண்ணுகிறான். அதன் பின்னர் எலிசா எலியாவைப் பின் தொடர்ந்து அவனுக்குப் பணிசெய்கிறான்.

இறைவன் எலியா மரணத்தைச் சந்திக்காமல் சுழல்காற்றின் மூலம் பரலோகத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் என்பது இறைச்சித்தம். அப்படியே அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு நடந்து போகும்போது அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. ஏலியா சுழல்காற்றினால் விண்ணரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்.

அந்த வேளையில் எலிசா கையறுநிலையாக , **"என் தகப்பனே , என் தகப்பனே , இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே"** (2 இராஜா. 2:12) என்று புலம்புகிறான். இஸ்ரவேல் மக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவனாய் எலியா திகழ்ந்தான் என்பதை இது புலப்படுத்துகிறது.

**தனது மரண வேளையில் இயேசு கிறிஸ்து**

பொதுவாகத் தமக்கு வேண்டியவர்களின் மரணத்தில்தான் கையறுநிலை பாடப்படுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்து உலக மக்களின் பாவங்களுக்காக மரணத்தை எதிர்கொண்ட வேளையில் அவரது கையறு நிலை சற்று வேறுபட்ட நிலையில் காணமுடிகிறது.

தவறேதும் செய்யாத இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுகிறார். அந்த நேரத்தில் தாங்கமுடியாத வேதனையில் தன் தந்தையாகிய பிதாவை நோக்கிக் கையறுநிலையாக , **"என் தேவனே! என் தேவனே! ஏன்**

**என்னைக் கைவிட்டீர் ?"** (மத்.27:46) என்று கதறுகிறார். சற்றுநேரம் கழித்து , **"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்"** (லூக். 23: 46) என்று கூறி தனது உயிரை விடுகிறார். இவ்வாறு தனது மரணவேளையில் தன் தந்தை தன்னைக் கைவிட்டு விட்டாரோ என்று கூறும் நிலையைக் காணமுடிகிறது.

**ஆய்வு முடிவுகள்**

உலகத்தின் பொது இலக்கியமான விவிலியத்தில் தமிழ் இலக்கிய இலக்கணக் கூறுகள் நிறைந்து காணப்படுகின்றன. தன்னிடம் அன்பாயிருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் தன்னைக் கொல்லத் துணிந்தவர்களுக்கும் கையறுநிலை பாடும் ஒப்பற்றப் பண்பு பாடமாக அமைகிறது. தனக்குரிய அனைத்தும் இழந்த சூழலிலும் கடவுளைக் குறை கூறாத உயரிய மாண்பு வெளிப்படுகிறது. பிறருக்காக மட்டும் கையறுநிலை பாடாமல் தமது இறுதிவேளையிலும் கையறுநிலை பாடப்படுகிறது. கையறுநிலை பாடும்போது இறந்தவரின் வீரம் ,பெருமை பேசப்படுவதோடு தனக்கும் அவருக்குமிடையேயான உறவுநிலையும் கூறப்படுகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1.திருவிவிலியம்

2.தொல்காப்பியம்

3.புறநானூறு

4.புறப்பொருள் வெண்பாமாலை

5.கண்ணதாசன் பாடல்கள்